# எண்ணும் எழுத்தும் – முதல் பருவம் – 2023–24
## மாதத் தேர்வு (ஜூலை)

வகுப்பு – 4 | அறிவியல் | நேரம் : 45 நிமி

பெயர் : | மதிப்பெண் :15

---

**பத்தியைப் படித்து அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

பள்ளியில் மருத்துவ முகாம் நடைபெற்றது. மருத்துவர் அனைத்து மாணவர்களையும் பரிசோதித்தார். பரிசோதிக்கும் பொழுது மருத்துவர் மூச்சை நன்றாக இழுத்து விடும்படிக் கூறினார். பிறகு மாணவர்களின் இதயத்துடிப்பை சோதித்து அறிந்தார். மருத்துவரிடம் ஒரு மாணவர் தனது பல் விழுந்து விட்டதாகக் கூறினார். மருத்துவர் கவலைப்படத் தேவையில்லை பல் முளைத்து விடும் எனக் கூறினார். மருத்துவர் பரிசோதித்துக் கொண்டிருக்கும் போது விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் பரிசுப் பொருள்களோடு உள்ளே நுழைந்தனர். மருத்துவரும் ஆசிரியரும் அவர்களைப் பாராட்டி இவர்களைப் போல நீங்களும் சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமாகவும், இருக்க வேண்டும் எனக் கூறினார். பின்பு மருத்துவர் மாணவர்களின் கண்கள், காதுகள், கைவிரல்கள், தோல் ஆகிய அனைத்தையும் சோதித்தார்.

**வினாக்கள்:**

1. **இதயத் துடிப்பை அறிய உதவும் கருவி**
   அ) தெர்மோமீட்டர் ஆ) ஸ்டெதஸ்கோப்
   இ) ஓடோமீட்டர் ஈ) அனிமோ மீட்டர்

2. **மூச்சை உள்ளிழுத்து வெளிவிடும் போது நுரையீரலுக்குள் சென்று வெளிவரும் வாயுக்கள் முறையே**
   அ) ஆக்சிஜன், கார்பன்-டை-ஆக்சைடு
   ஆ) கார்பன் டை ஆக்சைடு, ஆக்சிஜன்
   இ) கார்பன் டை ஆக்சைடு, ஹைட்ரஜன்
   ஈ) ஹைட்ரஜன், ஆக்சிஜன்

3. **மாணவர் கூறிய விழுந்து விடும் பற்கள் மற்றும் மருத்துவர் கூறிய முளைத்து விடும் பற்கள் முறையே**
   அ) பால் பற்கள் மற்றும் நிலைத்த பற்கள்
   ஆ) வெட்டும் பற்கள் மற்றும் கோரைப் பற்கள்
   இ) கோரைப் பற்கள் மற்றும் வெட்டும் பற்கள்
   ஈ) நிலைத்த பற்கள் மற்றும் பால் பற்கள்

4. **எலும்புகளும் தசைகளும் ஆரோக்கியமாக இருக்க என்ன செய்ய வேண்டும்?**
   அ) உடற்பயிற்சி செய்ய வேண்டும்
   ஆ) சத்தான உணவு சாப்பிட வேண்டும்
   இ) அ மற்றும் ஆ
   ஈ) இவற்றில் எதுவுமில்லை

5. **பத்தியில் குறிப்பிடப்படாத வெளியுறுப்பு எது?**
   அ) கண் ஆ) மூக்கு இ) காது ஈ) கைவிரல்

Scanned with OKEN Scanner

www.Padasalai.Net www.CBSEtips.in

**விடைகள்:**

1. ஆ) ஸ்டெதஸ்கோப்
2. அ) ஆக்சிஜன், கார்பன்-டை-ஆக்சைடு
3. அ) பால் பற்கள் மற்றும் நிலைத்த பற்கள்
4. இ) அ மற்றும் ஆ
5. ஆ) மூக்கு

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com
Scanned with OKEN Scanner